# சங்ககால வழிபாடு

ம.ராதா[#1]

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*தமிழ்த்துறை*

*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,*

*மதுரை - 625021.*

***ஆய்வுச்சுருக்கம்***

பண்டைக் காலத்தில் காடும் காடு சார்ந்த முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் திருமாலையும், மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் முருகனையும், வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் வேந்தனையும், கடலும் கடல் சார்ந்த நெய்தல், நிலத்தில் வாழ்ந்த மக்கள் வருணையையும் வழிபட்டுள்ளனர். சங்க இலக்கியங்களில் பாலை நிலக் கடவுளாக கொற்றவை குறிக்கப்படுகின்றார். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வங்களைப் பழந்தமிழர்கள் வழிபாட்டு முறைகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

***முன்னுரை***

உலகில் கடவுளின் ஆற்றல் இருப்பதை உணர்ந்த மனிதன் அவரை நெருக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய தொடங்கினான். அதுவே வழிபாடாக தோற்றம் பெற்றது. வழிபாடு என்ற சொல் இறைவனை அடைய மனிதன் மேற்கொள்ளும் வழிமுறைகளைக் குறிக்கிறது. வழியென்பது இறைவன் உள்ள இடத்திற்குச் செல்லும் வழியையும், பாடு என்பது இறைவனை அடைய மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகளில் வரும் இன்னல்களையும் குறிக்கின்றது.சங்கத்தமிழர்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். ஆகையால் அக வாழ்வில் காதலும் இல்லறமும் சிறக்கவும் புற வாழ்வில் நாடுகளைக் கைப்பற்றவும் போரில் வெற்றி பெறவும் கடவுளர்களை வழிபட்டுள்ளனர். பழந்தமிழர்கள் வழிபட்ட தெய்வங்கள் குறித்தும் அவர்கள் போற்றிய வழிபாட்டு முறைகளையும் இக்கட்டுரை வழி அறியலாம்.

***சங்க இலக்கியத்தில் வழிபாட்டுத் தெய்வங்கள்***

பண்டையக் காலத்தில் மக்கள் பல தெய்வங்களை வழிபட்டு உள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. பழந்தமிழர்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப் பகுப்பின் கீழ் வாழ்ந்தவர்கள். ஒவ்வொரு நில மக்களும் இயற்கையின் அடிப்படையில் ஒவ்வொரு கடவுளை வணங்கியுள்ளனர். இதனை,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மே மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெரும்மணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”** (தொல்.பொருள்:5)

என்ற தொல்காப்பிய நூற்பா எடுத்தியம்புகின்றது.

தமிழர்கள் முதலில் இறைவனை இயற்கையில் கண்டு வணங்கியதால், சங்க இலக்கியங்களில் கல்வழிபாடு,மரவழிபாடு போன்றவையும் காணப்படுகின்றன.

***திருமால் வழிபாடு***

சங்கத் தமிழர்கள் திருமாலை நன்மை பயக்கும் கடவுளாக வழிபட்டனர். இல்லற வாழ்வு சிறக்க கணவனும் மனைவியும் தம் குழந்தைகளுடன் இணைந்து சென்று இறைவனை வணங்கியுள்ளனர்.

**“திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை**

**யோன்பினர்த் தழீஇத் தாமதபுணர்ந்து முயங்கித்**

**தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்**

**தாமு மவரு மோராங்கு விளங்கக்**

**காமர் கவினிய பேரிளம் பெண்டிர்**

**பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சி”(ம.கா: 461-466)**

என்ற மதுரைக் காஞ்சி அடிகள் ஆண்கள் தம் மனைவி மக்களுடன் நின்று மலரும்,தூபமும் கொண்டு திருமாலை வணங்குவர். ஒளி பொருந்திய அணிகலன்களையுடைய அழகிய இளம் பெண்கள் தம் கணவரோடும், தாது மிகுந்த தாமரை மலரிரைனப் யொத்த முகங்களையுடைய குழந்தைகளோடும் சென்று காக்கும் கடவுளாகிய திருமாலைப் பூவும் புகையும் கொண்டு வணங்குவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. மேலும் பழந்தமிழர்கள் திருமாலைப் பலவாறாக வாழ்த்தி வணங்கியதை,

**“நின்னடி, தலையுற வணங்கினேம் பன்மாண்யாமும்**

**கலியில் நெருஞ்சினோம் ஏத்தினேம் வாழ்த்தினேம்**

**கடும்பெருங் கடும் பொடும் பரவுதும்**

**கொடும்பாடறி யற்க எம்மறி வெனவே” (பரி.பா: 2:72-75)**

என மெய்யுணர்வு பெறுதல் பொருட்டுத் திருமாலை நெருங்கி, அவரைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் வணங்கியதைப் பரிபாடல் விளக்குகிறது. திருமால் வழிபாடு சங்க காலத்தில் கூட்டு வழிபாடாக இருந்துள்ளதை அறிய முடிகிறது. மக்கள் சுற்றத்தாருடன் சேர்ந்து சென்று திருமாலை வழிபட்டதாகவே பல பாடல்கள் தெரிவிக்கின்றன.

***முருக வழிபாடு***

தமிழ்க் கடவுளான முருகனின் அருளால் எல்லா நலங்களையும், வளங்களையும் பெற்று வாழலாம் என்று தமிழர்கள் நம்பினர். சங்கத் தமிழர்கள் தாம் மட்டுமின்றி பிறரும் நலமுடன் வாழ வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள். முருகனை வழிபடச் சென்ற மக்கள் தாமும், தம் சுற்றமும் பாதுகாப்பான இன்ப வாழ்க்கையைப் பெற வேண்டுமென வேண்டிக் கொண்டுள்ளனர். இதனை,

**“அணி நெடுங் குன்றம் பாடுதும் தொழுதும்**

**அவையாமும் எம் சுற்றமும் பரவுதும்**

**ஏம வைகல் பெறுகயாம் என்றே"( பரி.பா: 17 :53-55)**

என்ற வரிகள் தெரிவிக்கின்றன. தமிழர்கள் தன்னலம் கருதாதவர்கள் என்பதை முருக வழிபாட்டின் வழி அறியமுடிகிறது.முருகன் சூரனை வென்றதால் போர்க் கடவுளாகக் கருதப்படுகிறார். ஆகையால் போர்க்குச் செல்லும் அரசரும் வீரரும் போரில் வெற்றிப் பெற வேண்டும் என்று முருகனை வழிபட்டுள்ளனர். முருகனைப் பலவாறாகப் புகழ்ந்துப் பாடினால் அவருடைய வீர உணர்வு நமக்கு கிட்டும் என்று வீரர்கள் நம்பியுள்ளனர். இந்நம்பிக்கை காரணமாகப் பாண்டிய மன்னனும் போருக்குச் செல்லும் முன் திருப்பரங்குன்றத்தில் இருக்கும் முருகனை வழிபட்டதாகப் பரிபாடல் கூறுகின்றது. முருகனது வெற்றிக்குக் காரணமான வேலும், கவசமும், கொடியும், தங்களுடைய முயற்சிக்கும் வெற்றிதரும் என்று வீரர்களும் அரசர்களும் நம்பியுள்ளனர்.

**"வேறுபடு சாந்தமும், வீறுபடு புகையும்**

**ஆறுசெல வளியின் அவியா விளக்கமும்**

**நாறுகமழ் வீயும் கூறும் இசை முழவமும்**

**மணியும் கயிறும் மயிலும் குடாரியும்"(பரி.பா: 8: 97-100)**

என்ற வரிகளின் வழி, முருகனை வணங்க சென்ற சிறந்த அடியவர்கள் யாழ், முழவு போன்ற இசைக் கருவிகளை இசைத்தும், மணியடித்தும் வேதங்களை முழங்கியும் முருகனை வழிபட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேலும் முருகனை வழிபடச் செல்பவர்கள் பால், தயிர், நெய்,தேன், சந்தனம், விளக்கு, நறுமண மலர்கள், முழவு, மணி, கயிறு முதலியவற்றை எடுத்துச் சென்றுள்ளதையும் உணரமுடிகிறது. முருகனுக்குரிய சேவல் கொடியை நட்டு, ஊர்தோறும் முருகனுக்கு விழா எடுத்ததை.

**"வாரணக் கொடியொடு வயன்படு நிறீஇ**

**ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்" (திருமுருகு: 219-220)**

என்ற திருமுருகாற்றுப்படை வரிகள் புலப்படுத்துகின்றன.

அதுமட்டுமின்றி சிறந்த நகரில் ஆரவாரம் உண்டாகும்படி முருகனைப் புகழ்ந்து பாடியும், ஆட்டைப் பலிக் கொடுத்தும், தினையரிசியுடன் இரத்தத்தைக் கலந்து தூவியும் முருகனை மக்கள் வழிபட்டதை,

**"களம் நன்கு இழைத்துக் கண்ணிசூட்டி**

**வளநர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து**

**உருவச் செந்தினை குருதியொரு தூஉய்**

**முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்" (அகம் :22)**

என அகநானூறு விளக்குகிறது. இத்தகைய வழிபாடுகளில் மட்டுமன்றி வெறியாட்டு என்ற கூத்தின் மூலமும் சங்க மக்கள் முருகனை வழிபட்டுள்ளனர். பாடலாலும் ஆடலாலும் இறைவனை அடையவும் முடியும் என்பதை உணர்ந்த பண்டைத் தமிழர் இறைவனை ஆடி, பாடி வழிபட்டுள்ளனர்.

### *இந்திர வழிபாடு*

வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதநிலக் கடவுளைத் தொல்காப்பியம் வேந்தன் எனக் குறிப்பிடுகிறது. வேந்தன் எனும் சொல் இந்திரனைக் குறிக்கிறது. சங்க இலக்கியத்தில் இந்திரனைப் பற்றிய குறிப்புகள் சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை, இந்திரனை

ஆயிரம் கண்களை உடையவர். நூறு யாகங்களை நடத்தியவர்; செல்வத்துக்கு அதிபதி; ஐராவதம் என்னும் யானையின் மேல் ஏறி வருபவர் என்று கூறுகின்றது. இதனை,

**"நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்**
**வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்**
**தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்**
**தாழ்பெருந் தடக்கை யுயர்ந்த யானை**
**யெருத்த மேறிய திருக்கிளர் செல்வன்" (திருமுருகு: 155-119)**

என்ற வரிகள் வழி அறிய முடிகிறது. மேலும் தொடி என்னும் அணிகலனையும், வச்சிராயுதத்தையும் உடைய இந்திரனுக்குக் கோயில் இருந்ததை,

**"..... ஓண்டொடி**
**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்" (புறம் : 241: 2-3)**

என்ற புறநானூற்று வரிகள் விளங்குகின்றன. சங்க காலத்தில் இந்திர வழிபாடு அவ்வளவாக சிறப்புப் பெறவில்லை. சமண, பௌத்த இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் இந்திர வழிபாட்டைப் பற்றியும், அவருக்காக எழுந்த விழாக்களைப் பற்றியும் விரிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

***வருண வழிபாடு***

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் எனப்பட்டது. நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் வருணன் என்ற கடல் தெய்வத்தை வழிபட்டுள்ளனர். கடற்கரைப் பகுதிகளில் வாழும் பரதவ மக்களுக்கு, வாழ்க்கை ஆதாரமாக அமைவது கடலாகும். அவர்களுடைய தொழில் கடலில் மீன் பிடித்து விற்பதாகும். கடலில் உள்ள வளங்கள் என்றென்றைக்கும் உதவவேண்டும் என்று எண்ணியும், அலைகள் திரண்டு வரும் கடலால் ஆபத்து நேராமல் இருக்க வேண்டும் என்று எண்ணியும் வருணனைப் பரவதர்கள் வழிபட்டுள்ளனர். பரதவர்கள் மணலில் சுறாக் கொம்பினை நட்டு, அதற்கு வெண்டாளி மலரைச் சூட்டி வழிபட்டதை,

**"வீழத் தாழைத் தாள் தாழ்ந்த**
**வெண் கூதாளத்துத் துண்பூங் கோதையார்**
**சினைச் சுறவின் கோடு நட்டு**
**மனைச் சேர்த்திய வல்ல ணங்கினான்" (ப.பா. 84-87)**

என்ற பட்டினப் பாலை வரிகள் எடுத்தியம்புகின்றன.

கடலானது நன்மை, தீமை இரண்டையுமே அளிக்கும் என்பதை உணர்ந்த பழந்தமிழர்கள் அதற்கு நன்றி செலுத்தும்விதமாகவும் அதற்கு அச்சப்பட்டும் கடலையே தெய்வமாக வணங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேலும் தொடக்கக் காலத்தில் இயற்கையை வழிபட்ட காரணத்தினாலும், வருணனுக்கு உருவம் இல்லாத காரணத்தினாலும் சுறாமீனின் கொம்மைக் கொண்டு வழிபாடு செய்துள்ளனர்.

***கொற்றவை வழிபாடு***

சங்கத் தமிழர்கள் வீரத்தை உயிரென மதித்தவர்கள் வீர உணர்வுடன் போர்க்குச் சென்று வெற்றி பெற வேண்டும் என்று விரும்பியவர்கள். ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் தங்கள் தலைவர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற உணர்வுடையவர்களாக இருந்துள்ளனர். தெய்வம் ஒன்றே தங்கள் தலைவர்களுக்கு வெற்றியைத் தரும் என்று நம்பிய பெண்கள் போர்த்தெய்வமாகிய கொற்றவையை வழிபட்டுள்ளனர். இதனை,

**“புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு**

**இன்னா அரும்படர்தீர விறல் தந்து**

**இன்னே முடிகத்தில் அம்ம” (நெ.ந.வா. 166-168)**

என்ற நெடுநெல்வாடை வரிகள் போருக்குச் சென்ற தலைவன் வெற்றி பெற்று திரும்ப வேண்டும் என தலைவியின் தோழிகள் வேண்டிக் கொண்டதைக் காட்டுகின்றன.

கொற்றவையை வேண்டி கொண்டதன் விளைவாக, போரில் வெற்றி கிடைத்தும் அவருக்குப் பலியிட்டும் வணங்கியுள்ளனர். வீரர்கள் போரில் ஏற்பட்ட காயத்திலிருந்து வலியும் குருதியை எடுத்து, சிறிதும் தயங்காமல் மடைபுறத்தில் தெளிப்பர். அதை கொற்றவையும் ஏற்றுக் கொள்வார் என்பதை,

**“நிறம்படு குருதி புறம்படின் அல்லது**

**மடைஎதிர் கொள்ளா அஞ்சுவர மரபில்**

**கேடு இலவாக” (ப.ப. 79: 16-18)**

**“வயவான் எறிந்து வில்லின் நீக்கிப்**

**பயநிரை தழீஇய கடுங்கண் மடி வர்**

**அம்பு சேட்படுத்து வன்புலத்துய்ந்தெனத்**

**தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்**

**கொழுப்பா சேர்ந்த பராரை வேம்பிற்**

**கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்**

**பலவு புழுக்கொண்ட வான்கண கலறை” (அகம்: 309)**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. வீரர்கள் தங்கள் குருதியை மட்டுமல்லாது பலியிட்ட பசுவின் குருதியையும் தெளித்து கொற்றவையை வழிபட்ட செய்தியை அகநானூறு பாடல் வழி அறிய முடிகிறது.பிளவுகளையும், குகைகளையும் உடைய மலைகளில் எழுந்தருளியுள்ள வெற்றி தருகின்ற சூலத்தை கையில் கொண்ட கொற்றவைக்குப் பலிக்கடன் நிறைவேற்றதலைப் பற்றி,

**“விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**

**கடனும் பூணாம்” (குறுந் : 218: 1-2)**

எனக் குறுந்தொகை விளக்குகின்றது. சங்க காலத்தில் போர்த் தெய்வமாகவும், வெற்றித் தெய்வமாகவும் விளங்கிய கொற்றவை காலப் போக்கில் மக்களால் சிறுதெய்வம், பெருந்தெய்வமாக வணக்கப்பட்டார். மாரியம்மன், காளியம்மன், எல்லையம்மன், இசக்கி அம்மன், அங்காள ஈஸ்வரி போன்ற பல பெயர்களில் சிறு

தெய்வமாகவும், துர்க்கை அம்மன், மீனாட்சி அம்மன், பார்வதி, உமையம்மன் போன்ற பெயர்களில் பெருந்தெய்வமாகவும் தற்போதும் வழிபடப்படுகிறார்

***நடுகல் - வழிபாடு***

இறந்தோர்களை வழிபட்டால் வேண்டியதைப் பெறலாம் என்ற நம்பிக்கை பழந்தமிழரிடம் காணப்பட்டது. அந்த வகையில், நாள்தோறும் நடுகல்லினை வணங்கி விருந்தெதிர் பெற வேண்டும் என்றும் தம் கணவர் பகையை ஒழித்து விரைந்து வர வேண்டும் என்றும் முன்னோரின் நடுகற்களைப் பெண்கள் வழிபட்டுள்ளனர்.

**“ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை**

**நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது**

**விருந்து எதிர் பெறுகதில் யானே”** (புறம்: 306: 3-5)

என்ற புறநானூற்றுப் பாடல் வழி, போரில் வெற்றி பெற வேண்டும் என்று ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் தம் கணவர் போரில் வெற்றி பெறுவதற்கு நடுகல்லினை வழிபாடு செய்ததை அறிய முடிகிறது.

**“இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்**

**புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி**

**நன்னீர் ஆட்டி, நெய்ந் நறைக் கொளீஇய**

**மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்”** (புறம்: 329: 1-4)

என்ற புறநானூற்றுப் பாடல் நடுகல்லினை மக்கள் நீராட்டி அதற்கு பலியிட்டு, நெய் விளக்கும் ஏற்றியுள்ளனர். விளக்கிலிருந்து எழும் புகை மேகம் போல் படர்ந்து தெருவெல்லாம் மணம் வீசியதைக் காட்டுகிறது. பகைவர் படைகளின் முன்னின்று, அவர்களின் களிற்றை வென்று, தாமும் வீழ்ந்தப்பட்ட வீரனின் நடுகல்லினை வழிபடுவதின்றி, பிற வழிபாடுகள் சிறந்ததாகாது என்பதை,

**“ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**

**ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்**

**கல்லே பரவின் அல்லது**

**நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலமே”** (புறம்:335: 9-12)

என்ற புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது. மற்றைய கடவுள் வழிபடுகளை விட நடுகல் வழிபாடே அதிக பயனை அளிக்கும் என்பது சங்கத்தமிழ் வீரர்களின் நம்பிக்கையாக இருந்ததுள்ளது.

நடுகல்லினை வழிபட்டு நாள்தோறும் அதற்கு பலியிடுதலும் சங்க காலத்தில் வழக்கிலிருந்தன. நடுகற்களுக்கு மயில்தோகைகளைச் சூட்டி, துடி அடித்து, கள்ளொடு செம்மறிக் குட்டியையும் பலி கொடுத்துள்ளனர். இதனை,

**“நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்**

**தோப்பிக் கள்ளொடு துரூ உப்பலி கொடுக்கும்”** (அகம்: 35: 8-9)

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அறியமுடிகிறது. மேலும்,

**"நடுகற் பீலி சூட்டி நாரரி**

**சிறுகலத் துகுப்பவுங் கொள்வன்"** (புறம்: 232: 3-4)

என்ற புறநானூற்று பாடல் வழி கல்லின் கண் நாரால் அரிக்கப்பட்ட தேறலைச் சிறிய கலத்தால் உகுத்தலும் வழக்கில் இருந்ததை உணர முடிகிறது. நடுகல்லிற்குப் பலியிடுவதும், கள் படைப்பதும் பழந்தமிழர்களின் பழக்கமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

***மரவழிபாடு***

பழந்தமிழர்கள் இயற்கையோடு வாழ்க்கையை நடத்தியவர்கள். தமக்கு நன்மையும், தீமையும் தருவது இயற்கையே என்று எண்ணி அதற்கு அஞ்சி, வழிபாடு செய்துள்ளனர். அந்த வகையில் மரவழிபாடும் தமிழர்களின் அச்சம் மற்றும் நன்றி உணர்வின் அடிப்படையில் தோற்றம் பெற்றன. பெரும்பாலான மரங்கள், கனிகளைத் தருபவையாகவும், உடல்நோய்களைத் தீர்க்கும் மருத்துவ பொருட்களைத் தன்னகத்தே கொண்டதாகவும், கிளைகளைப் பரப்பி நிழல் தருவனவாகவும் இருந்தன. இத்தகைய நன்மைகளையெல்லாம் மரம் தருவதால் அவற்றைக் கடவுளாக எண்ணி வழிபட்டனர். சில மரங்கள் விஷ கனிகளைத் தருபவையாகவும், நச்சுக்காற்றை வெளியிடுபவையாகவும் இருப்பதால், அவற்றிற்கு அஞ்சி, துன்பம் நிகழாமல் இருக்கவும் மரங்களை வழிபட்டுள்ளனர்.

சங்க இலக்கியங்களில் சில மரங்கள் கடவுளாக வழிபடப்பட்டுள்ளன. ஊர்மன்றத்தில் உள்ள கடம்ப மரத்தில் பழமையான தெய்வம் உறைவதாகவும், அத்தெய்வம் கொடுமைச் செய்பவர்களைக் கொல்லும் என்றும் மக்கள் நம்பியுள்ளனர். இதனை,

**"மன்றக் மராஅத் பேம்முதிர் கடவுள்**

**கொடியோர்த் தெறூஉம் என்ப"** (குறுந். 87: 1-2)

என்ற குறுந்தொகைப் பாடல் உணர்த்துகிறது. இன்றும் மரவழிபாட்டின் எச்சங்கள் காணப்படுகின்றன. கோவில் அமைத்து உருவ வழிபாடு நடைபெறும் இன்றைய காலத்தில் மரங்கள் கோவில்களில் 'கொடிமரங்கள்' என்ற பெயரிலும், தலவிருட்சம் என்ற பெயரிலும் வணங்கப்படுகின்றன. மக்கள் வேப்பமரம், அரசமரம், ஆலமரம் போன்றவற்றில் தெய்வம்

உறைவதாக இன்றுவரை நம்புகின்றனர்.

***முடிவுரை***

வாழ்க்கைக்கு வேண்டிய நன்மைகளை அளித்த கடவுளுக்கு நன்றி செலுத்தவும் தீமைகள் ஏற்பட்ட போது அதற்கு அஞ்சி, அதிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் சங்கத் தமிழர்கள் கடவுளை வழிபட்டதைஅறிய இயலுகிறது. இயற்கையிடமிருந்து கடவுளின் அற்றல் வெளிப்படுவதாக எண்ணியத் தமிழர்கள் இயற்கையில் உறையும் தெய்வங்களை வழிபட்டதையும் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

***துணைநூற்பட்டியல்***

[1] சண்முகம் பிள்ளை, மு., (ப.ஆ) **தொல்காப்பியம் பொருளதிகாரம்** முதற்பகுதி முல்லை நிலையம், சென்னை -600 017.பதிப்பு,2010.

[2] சோமசுந்தரனர், பெரும்மழைப்புலவர், பொ.வே., (உ.ஆ),**அகநானூறு**திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை – 1பதிப்பு, 1977.

[3] துரை இராசாராம் (உ.ஆ) **குறுந்தொகை** திருமகள் நிலையம், சென்னை-600 017.பதிப்பு, 2011.

[4] துரைச்சாமிப்பிள்ளை. அவ்வை, சு., (.உ.ஆ)**பதிற்றுப்பத்து**சாரதா பதிப்பகம், சென்னை– 600014. பதிப்பு, 2012.

[5] துரைச்சாமிப்பிள்ளை. அவ்வை, சு., (வி.உ.) **புறநானூறு** திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை – 1 பதிப்பு, 2002.

[6] மாணிக்கவாசகன் ஞா., (வி.உ) **பத்துப்பாட்டு** உமா பதிப்பகம், சென்னை – 600001. பதிப்பு, 2007.

[7] மாணிக்கவாசகன் ஞா., (வி.உ) **பரிபாடல்** உமா பதிப்பகம், சென்னை – 600 001.பதிப்பு,2009.